# மானியக் கோரிக்கை எண்.38

# பொதுத்துறை

# 2009–2010 ஆம் ஆண்டுக்கான

# கொள்கை விளக்கக் குறிப்பு

தலைமைச் செயலரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும் பொதுத்துறை மாநிலத்தின் பொது நிர்வாகம் தொடர்பான முக்கியமான பணிகளைக் கையாளுகிறது. இத்துறையில் கையாளப்படும் சில முக்கிய பணிகள் பின்வருமாறு:-

- மேதகு ஆளுநர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் தொடர்பான பணிகள்.
- தகைசால் பெருமக்களின் வருகையின்போது மரபு சீர்முறையிலான ஏற்பாடுகளைச் செய்தல்.
- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு மற்றும் பன்மாநிலக்குழு உட்பட, நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையிலான பொதுவான விவரங்கள் குறித்து கவனித்தல்.
- நடுவண் அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் அயல்நாட்டு தூதரகங்களுடன் தொடர்பு கொள்ளல்.
- தமிழகத்தில் முறையான நுழைவிசைவுடன் (Visa) இருக்கும் பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் நீங்கலான பிற அயல்நாட்டவரின் தங்கும் காலத்தை நீட்டித்து வழங்கல் மற்றும் வெளியேற அனுமதித்தல்.
- இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோருக்குப்

பணிநியமனம் வழங்குதல் மற்றும் அவர்களின் பணியமைப்பு.

- சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகள்.
- விசாரணை ஆணையங்கள் அமைத்தல் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் பணியமைப்பு தொடர்பான பணிகள்.

- சென்னை மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள விருந்தினர் இல்லங்கள் மற்றும் புதுதில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் மற்றும் கூடுதல் இல்லம் ஆகியவற்றை நிர்வகித்தல்.
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன் மற்றும் முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் நிர்வாகம்.
- இலங்கை அகதிகளுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருதல்.
- பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண உதவிகளை அனுப்பி வைத்தல்.
- அரசுக்குச் சொந்தமான விமானம் மற்றும் ஹெலிகாப்டர் ஆகியவற்றை பராமரித்தல்.
- தாயகம் திரும்பியோரின் நலன் மற்றும் மறுவாழ்வு குறித்த பணிகள்.
- இந்திய தேசிய இராணுவ வீரர்கள் மற்றும் சுதந்திரப்

போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் நலப் பணிகள்.

- பொது விடுமுறை அறிவித்தல்.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கப்படும் மனுக்களை முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் தீர்வு செய்தல்.

இப்பணிகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

**I, அரசு விருந்தினர் இல்லங்கள்**

தமிழகத்திற்கு வருகைதரும் முக்கிய, மிக மிக முக்கிய பிரமுகர்களான மேதகு இந்திய குடியரசுத்தலைவர், மாண்புமிகு இந்திய குடியரசு துணைத்தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மத்திய அமைச்சர்கள், அயல்நாட்டு பிரமுகர்கள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்ற மாநில அமைச்சர்கள், இந்திய அரசின் செயலாளர்கள், மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழுக்களின் தலைவர்கள் / உறுப்பினர்கள் அனைவரும் அரசு விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, தங்கும் வசதி, உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது பொது (மரபு) த்துறையின் முக்கிய பணிகளாகும்.

**தமிழ் நாட்டிற்கு முக்கிய விருந்தினர்கள் வருகை:**

2. 2008–2009–ஆம் ஆண்டு தமிழகத்திற்கு, மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் மூன்று முறையும், மாண்புமிகு இந்திய குடியரசு துணைத்தலைவர் அவர்கள் இரு முறையும், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் இரு முறையும், முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் இருபத்தி ஆறு முறையும், அயல் நாட்டு தலைவர்கள் பத்து முறையும், அண்டை மாநில முதலமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் முன்னாள் ஆளுநர்கள் 148 முறையும், மத்திய அமைச்சர்கள் 1685 முறையும் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் / தலைவர்கள் 566 முறையும்,

உச்சநீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் அண்டை மாநில உயர்நீதிமன்ற நீதியரசர்கள் 147 முறையும், மத்திய அரசின் செயலாளர்கள் மற்றும் ஏனைய மத்திய அரசின் அதிகாரிகள் மற்றும் பிற மாநில அமைச்சர்கள் 587 முறையும் வருகை புரிந்துள்ளனர்.

**அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை.**

3. அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம் மற்றும் அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, ஆகிய இரண்டும் மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள வரவேற்பு அலுவலர் மற்றும் இணை மாநில மரபு அலுவலர் அவர்களின் நேரடி நிர்வாகத்தில் அரசு செயலாளர், பொதுத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9, அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. அரசு விருந்தினர் இல்லத்தில் ஆறு அறைத் தொகுதிகள் (Suites) மற்றும் இருபத்தி மூன்று அறைகள் உள்ளன. இவை அனைத்தும் குளிர்சாதன வசதி கொண்டவை. இவை தவிர குளிர்சாதன வசதியுடன் கூடிய வரவேற்புக்கூடம் மற்றும் உணவு அருந்தும் அறையும் உண்டு.

**அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.**

4. அரசு ஓய்வு இல்லம், சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இரண்டு மாடி கட்டிடத்தில் 24 இரண்டு படுக்கை அறைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. வருவாய்த்துறை வட்டாட்சியர் ஒருவர் உதவி வரவேற்பு அலுவலராக அரசு ஓய்வு இல்லத்தை நிர்வகித்து வருகிறார்.

**தமிழ்நாடு இல்லம், புதுதில்லி**

5. மாநில விருந்தினர்கள், உயர் பெருமக்கள், அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு அலுவலர்கள், மத்திய அரசு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலரல்லாதோர் ஆகியோருக்கு உறையுள் மற்றும் உணவு வசதி செய்து கொடுப்பதற்கென்று தமிழக அரசின் தமிழ்நாடு இல்லம் புதுதில்லியில் அமைக்கப்பட்டுள்ளது.

6. பழைய தமிழ்நாடு இல்லத்தின் பழைய கட்டடம் 1962 ஆம் ஆண்டு ரூ.9 இலட்சம் செலவில் 1.757 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து 1976 ஆம் ஆண்டு ரூ. 61 இலட்சம் செலவில் மூன்றடுக்கு மாடி கட்டடம் கட்டப்பட்டது. 1992 ஆம் ஆண்டு புது தில்லி, நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் 7956.62 சதுர மீட்டர் நிலம் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்டது. இந்நிலத்தில் தமிழ்நாடு

இல்லத்தின் கூடுதல் விருந்தினர் இல்லம் ரூ.27.2 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

7. இடவசதி ஒதுக்கீடு உள்ளிட்ட தமிழ்நாடு இல்லத்தின் முழுக் கட்டுப்பாட்டுப் பொறுப்பும் பொதுத் துறையிடம் உள்ளது. இவ்வில்லத்தின் கட்டடங்களைப் பராமரிப்பது பொதுப் பணித்துறைத் தலைமைப் பொறியாளரின் பொறுப்பாகும். இவ்வில்லத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு மற்றும் அனைத்து பணிகளும் துறைத்தலைவர் நிலையிலுள்ள தமிழக அரசின் உள்ளுறை ஆணையர் பொறுப்பிலுள்ளது. இவருக்கு இணை உள்ளுறை ஆணையர் அனைத்துப் பணிகளிலும் உறுதுணையாக இருக்கின்றார். இவ்வில்லத்தின் இடவசதி ஒதுக்கீட்டு ஆணைகள் பொதுத் துறையில் வெளியிடப்படுகின்றன. பழைய தமிழ்நாடு இல்லத்தில் 45 அறைகளும், 9 அறைத் தொகுதிகளும், கூடுதல் விருந்தினர் இல்லத்தில் 46 அறைகளும், 26 அறைத் தொகுதிகளும் உள்ளன.

8. தமிழ்நாடு இல்லத்தின் பணிகள் (1) வரவேற்பு (2) உணவு வசதி (3) இல்லக்காப்பு, (4) பொறியியல் (5) கணக்கு (6) பணியமைப்பு, மற்றும் (7) தொடர்பு அலுவல் என பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

9. மேலும், தமிழ்நாடு இல்லம், நடுவண் அரசின் பல துறைகளுக்கும், தமிழக அரசுக்கும் இடையே ஒரு தொடர்புப் பாலமாக பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

<u>தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம்</u>

10. தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம் இரயில் நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 2.8 கிலோ மீட்டர் தொலைவில், பனி படர்ந்த மரச் செறிவான இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது. அழகிய விசாலமான கட்டடங்கள், அழகிய தோட்டம் மற்றும் மரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இவ்வில்லம் 36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்குள்ள தோட்டம் தோட்டக் கலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

11. அலுவல் காரணமாக உதக மண்டலத்திற்கு வருகைதரும் மிக முக்கிய விருந்தினர்கள், அமைச்சர் பெருமக்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் மாநில தன்னாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் ஆகியோருக்கு உணவு மற்றும் உறையுள் வசதி செய்து கொடுக்கும் முக்கிய நோக்குடன் இவ்வில்லம் இயங்கி வருகிறது. தமிழக அரசு வழங்கும்

பெருமளவு மானியத்தில் இயங்கி வரும் இவ்வில்லம் மிக முக்கிய விருந்தினர்களுக்கும் அலுவலர்களுக்கும் சலுகைக் கட்டணத்தில் நிறைவான வசதிகளைச் செய்து கொடுத்து அதன் முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றி வருகிறது.

**12.** ஏப்ரல் முதல் ஜுன் வரையிலான கோடைப்பருவம் மற்றும் செப்டம்பர் முதல் அக்டோபர் வரையிலான இரண்டாம் பருவம் ஆகிய காலங்களில் இவ்வில்லத்தில் தங்குவதற்கான அறைகள் ஒதுக்கீடு பொதுத் துறையால் வழங்கப்படுகிறது. பிற பருவ காலங்களில் நீலகிரி மாவட்ட ஆட்சியரால் அறைகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழகம் விருந்தினர் மாளிகையில் மொத்தம் 33 அறைகள் உள்ளன.

**13.** இந்த இல்லத்தில், 200 பார்வையாளர்கள் வசதியாக அமரக் கூடிய அவைக்கூடம் ஒன்று உள்ளது. இங்கு சட்டமன்றப் பேரவையைச் சேர்ந்த பல்வேறு குழுக்களின் ஆய்வுக் கூட்டம் மற்றும் கருத்தரங்கம் போன்றவை நடைபெற்று வருகின்றன.

## II. தேசிய விழாக்கள், சிறப்பு நாட்கள் மற்றும் விருதுகள்

**14.** இத்துறை ஒவ்வொரு ஆண்டும் குடியரசுநாள் விழா அன்று, சென்னை கடற்கரையில், முப்படைகளின் அலங்கார அணிவகுப்போடு, ஆடல், பாடல் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் மேதகு ஆளுநர் அவர்கள் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது. மேலும், சுதந்திரநாள் விழாவின் போதும், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றிவைக்கும் நிகழ்ச்சிக்கான பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. நடுவண் அரசு அறிவித்துள்ள தியாகிகள் நாள், கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள், மதநல்லிணக்க நாள், தேசிய ஒருமைப்பாட்டு நாள் முதலிய நாட்களில் தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உறுதிமொழி செய்து வைக்கும் நிகழ்ச்சிகளும் இத்துறையால் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

**15.** இவை தவிர, அரசின் நலத்திட்டங்களை ஆய்வு செய்யும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு குறித்த அனைத்து ஏற்பாடுகளும் இத்துறையால் செய்யப்படுகின்றன. வீர தீரச் செயல்களுக்கான நடுவண் அரசின் விருதுகளான ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக சக்ரா, கீர்த்தி சக்ரா, சௌர்ய சக்ரா போன்ற விருதுகளுக்கும், பொது நிருவாகத்தில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்காக அளிக்கப்படும் பிரதமர் விருது, பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண், மத நல்லிணக்கத்திற்கான கபீர் விருது, சமாதான விருதான காந்தியடிகள் அமைதி விருது போன்ற நடுவண் அரசின் படைத் துறை சாராதவர்களுக்கான விருதுகளுக்கும் இத்துறையின் மூலம் பரிந்துரைகள் அனுப்பப்படுகின்றன. மேலும், மாநில அரசின் விருதுகளான அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மதநல்லிணக்கப் பதக்கம், கல்பனா சாவ்லா விருது ஆகியவற்றுக்கான விருதாளர்கள் தேர்வு தொடர்புடைய பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. பெருந்தலைவர் காமராசர், அண்ணல் அம்பேத்கார், பேரறிஞர் அண்ணா, மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழ்த் தென்றல் திரு.வி.க மற்றும் தந்தைப் பெரியார் விருது முதலிய மாநில அரசு விருதுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, விருதாளர்களைத் தெரிவு செய்வதற்கான பணியும் இத்துறையைச் சார்ந்ததாகும்.

## III. அயல் நாட்டினர்

**16.** தமிழகத்திற்கு படிப்பதற்காகவும் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்களுடன் தங்குவதற்காகவும் வருகை புரிந்துள்ள அயல்நாட்டினர்களுக்கு (பாகிஸ்தான் மற்றும் வங்கதேச நாட்டினர் தவிர) இந்தியாவில் தங்கும் காலத்தை நீட்டித்தும் மேலும் அவர்கள் சிறிது காலம் (அதாவது 90 நாட்களுக்கு உட்பட்டு) அவர்களின் சொந்த நாட்டிற்குச் சென்று வர விழைபவர்களுக்கு மீள நுழைவிசைவு மேற்குறிப்பும் (Return Visa Endorsement) மற்றும் இந்தியாவை விட்டு வெளிச்செல்ல விழைபவருக்கு வெளிச்செல்அனுமதியும் (Exit Permission) இத்துறையில் வழங்கப்படுகின்றன. தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை நாட்டவர்களுக்கு மைய அரசின் ஆணை பெற்று இங்கே தங்க அனுமதி நீட்டித்து வழங்கப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்குட்பட்டு அனுமதியின்றி தங்கியுள்ள இலங்கை நாட்டவர்களுக்கு இந்தியாவை விட்டு வெளியே செல்ல இத்துறையில் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அனுமதியின்றி தங்கியுள்ள இலங்கை நாட்டவர்களுக்கு மைய அரசின் ஆணை பெற்று இந்தியாவை விட்டு வெளியே செல்ல இத்துறையில் அனுமதி வழங்கப்படுகிறது. தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் அயல்நாட்டினர் யாரேனும் சமூக விரோதச் செயலில் ஈடுபட்டாலோ அல்லது விதிகளை மீறிச் செயல்பட்டாலோ அல்லது அவர்கள் மீது எதிர்மறையான குறிப்புகள் எதுவும் பெறப்பட்டாலோ மைய அரசின் இசைவு பெற்று அவர்களை இந்தியாவை விட்டு வெளியேற்ற இத்துறையால் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

17. மேலும், வேலை தேடியோ அல்லது மேல் படிப்பிற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளிநாடுகளுக்குச் செல்ல விழைபவர்களுக்கு தமிழகத்தில் உள்ள அமைப்புகளால், (அதாவது பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்வி இயக்ககம், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்ககம், அரசுத் தேர்வுகள் இயக்ககம்) வழங்கப்படும் சான்றிதழ்கள் மேலும் திருமணச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், உறுதி மொழிப்பத்திரம், வாரிசுச் சான்றிதழ் மற்றும் நீதிமன்ற ஆணைகள் போன்றவற்றையும் உரிய அலுவலகங்களில் அதன் உண்மைத்தன்மை சரிபார்க்கப்பட்டபின் இத்துறையால் சான்றுறுதி செய்யப்படுகின்றன. பொதுமக்கள் நேரடியாக வருகைபுரியும் இந்தப் பிரிவு 26.4.2008 முதல் தலைமைச் செயலகத்தின் தரைதளத்தில் தனியே செயல்படுகிறது. இந்த ஆண்டில் (2009-2010) இப்பிரிவினுடைய பெரும்பான்மையான பணிகளை கணினிமயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## IV. அகதிகள் நிவாரணம் மற்றும் தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

18. 1983-ம் ஆண்டு முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக பெருவாரியான இலங்கைத் தமிழர்கள் தங்களது வீடுகளையும் மற்றும் உடைமைகளையும் விட்டுவிட்டு விமானம் மற்றும் கப்பல் மூலமாக உயிரைப் பாதுகாத்துக்கொள்ள இந்தியாவிற்கு அகதிகளாக வந்துள்ளனர்.

**19. 1983ல் தொடங்கி 1987 வரை முதல் கட்டமாகவும், 1989 முதல் 1991 வரை இரண்டாவது கட்டமாகவும், 1996 முதல் 2003 வரை மூன்றாவது கட்டமாகவும், 12.1.2006 முதல் 31.3.2009 வரை நான்காவது கட்டமாகவும் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு அகதிகள் வந்து சேர்ந்தனர்.**

<u>அகதி முகாம்கள்</u>

**20.** தற்போதைய நிலவரப்படி, இரு சிறப்பு முகாம்களை உள்ளடக்கிய **115** முகாம்களில் **19,705** குடும்பங்களைச் சார்ந்த **73,451** இலங்கைத்தமிழர்கள் **26** மாவட்டங்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. அதற்கான ஒட்டுமொத்த செலவினமும் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவினங்கள் நடுவண் அரசிடமிருந்து ஈடுசெய்யப்படுகின்றன.

<u>அகதிகளுக்கு பணக்கொடை வழங்குதல்</u>

**21.** அகதிகள் முகாமிலுள்ள அனைத்து குடும்பத்தினருக்கும் அத்தியாவசிய பொருட்கள் வாங்க மாதந்தோறும் பின்வருமாறு பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது:-

**1.8.2006 முதல் வழங்கப்படும் பணக்கொடை**

| | | |
|---|---|---|
| 1. | தனி உறுப்பினர் (12 வயதிற்கு மேற்பட்ட) / குடும்பத்தலைவருக்கு | ரூ. 400/– |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கும் | ரூ. 288/– |
| 3. | 12 வயதிற்குட்பட்ட முதல் குழந்தைக்கு | ரூ. 180/– |
| 4. | ஒவ்வொரு கூடுதல் குழந்தைக்கும் | ரூ. 90/– |

**22.** இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் அகதிகளுக்கு வழங்கப்படும் பணக்கொடையை அதிகரிப்பது குறித்து நடுவண் அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி, அதில் வெற்றிகண்டு, முந்தைய அளவை விட 100 விழுக்காடு பணக்கொடை கூடுதலாக வழங்கப்படுகிறது. இவ்வாறு பணக்கொடை வழங்குவதற்காக

2007–08ஆம் ஆண்டில் ரூ.24.53 கோடி செலவழிக்கப்பட்டது; 2008–09 ஆம் ஆண்டில் ரூ.26.00 கோடி திருத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மார்ச் 2009 முடிய ரூ.24.57 கோடி செலவாகியுள்ளது.

<u>மானிய விலையில் அரிசி வழங்குதல்</u>

23. தமிழ்நாடு அரசு, முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு கிலோவுக்கு 57 காசு என்ற மானிய விலையில் அரிசி வழங்கி வருகிறது. ஒவ்வொரு பெரியவருக்கும் (எட்டு வயதிற்கு மேற்பட்டவர்) நாளொன்றுக்கு 400 கிராம் மற்றும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் (எட்டு வயதிற்கு உட்பட்டவர்) நாளொன்றுக்கு 200 கிராம் வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவைப்படும் மானிய விலை அரிசி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பொது விநியோக திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம் அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு இந்த விலை வேறுபாட்டுத் தொகையினை வழங்கிய பின் அத்தொகையை நடுவண் அரசிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்கிறது. நடுவண் அரசு மானிய விலையில் அரிசி வழங்கும் திட்டத்தினை 5.8.2005 முதல் நிறுத்தியபோதும், தமிழ்நாடு அரசு தனது நிதியிலிருந்து இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வந்தது. தமிழக அரசின் இடையறாத முயற்சியினால் இத்திட்டத்தினை தொடர நடுவண் அரசின் இசைவு பெறப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 2007–08 நிதியாண்டில் ரூ.8.32 கோடி செலவழிக்கப்பட்டது. 2008–09 நிதியாண்டில் 31.03.2009 வரை ரூ.8.25 கோடி செலவிடப்பட்டுள்ளது.

<u>துணி வகைகள்</u>

24. ஒவ்வொரு வருடமும் முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கு இலவசமாகத் துணி வகைகள் மற்றும் பாய்களை அரசு வழங்கி வருகிறது. மேலும், ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெரியவர்களுக்கும் ஒரு போர்வை வீதம் இரண்டாண்டுக்கொரு முறை அரசால் வழங்கப்படுகிறது. நடுவண் அரசு நிர்ணயித்த அளவில், முகாமில் தங்கியுள்ள அகதிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் துணிகளும்,

பாய்களும் வழங்கப்படுகின்றன. 2007–2008 முதல் அகதிகளுக்கு வழங்கப்படும் துணிவகைகளின் கொள்முதல் விலைக்கான நிதி ஒதுக்கீடு சுமார் 28% உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

<u>சமையல் பாத்திரங்கள்</u>

25. முகாமில் தங்கியுள்ள ஒவ்வொரு அகதி குடும்பத்திற்கும் உணவு தயாரிக்க சமையல் பாத்திரங்கள் இரண்டாண்டிற்கு ஒருமுறை வழங்கப்படுகின்றன. குடும்பம் ஒன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட செலவினத் தொகையான ரூ.150/- 2008-2009–ஆம் ஆண்டு முதல் ரூ.250/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

<u>நலவாழ்வு மற்றும் மருத்துவ உதவிகள் :</u>

26. இலங்கைத் தமிழர்களின் நலவாழ்விற்காக முகாம்களுக்கு அருகில் உள்ள ஆரம்பச் சுகாதார மையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள் மூலம் மருத்துவ பரிசோதனை மற்றும் இலவச மருத்துவ சேவைகளைப் பெற்றிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெரிய அளவிலான மருத்துவ சிகிச்சைக்கான பண உதவி ஒவ்வொரு நிகழ்வின் அடிப்படையில், மாவட்டாட்சியாளர்களின் பரிந்துரைகளின்படி இலங்கைத் தமிழர் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து அரசினால் வழங்கப்படுகிறது. 2006–ஆம் ஆண்டில் இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது, அகதிகள் முகாமில் தங்கியுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் கல்வி மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்குடன், 1.4.2007 முதல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

27. டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவி திட்டத்தின் கீழ் மகப்பேறுக்கு முன்னரும் பின்னரும் தலா மூன்று மாதங்களுக்கு ஊட்டச்சத்து உணவுக்காக மாதம் ரூ.1000/– வீதம் வழங்கப்படும் பண உதவித் திட்டம் 1.4.2007 முதல் கருவுற்ற இலங்கை அகதிப் பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2007–08ஆம் ஆண்டில் 905 இலங்கை அகதிப் பெண்கள் பயனடைந்துள்ளனர்; 2008–09ஆம் ஆண்டில் 805 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

<u>இலவசக் கல்வி</u> :

28. இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகளுக்கு மேல் நிலை வகுப்பு (பிளஸ் 2) வரையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருவதுடன் அவர்களுக்கு சீருடைகள், மதிய உணவு, பேருந்து சலுகை, புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் மற்றும் மிதியுந்துகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாம்களுக்கு வெளியில் தங்கி கல்வி பயிலும் இலங்கை அகதி மாணவர்கள் தங்களுக்குரிய பணக்கொடை மற்றும் இதர சலுகைகளைப் பெற்றுக்கொண்டு படிப்பைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். தற்போது 20,045 குழந்தைகள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர்.

<u>24 மணி நேரம் மின்சார வசதி</u>

29. இவ்வரசு ஆட்சிக்கு வந்த பிறகு முகாம்களில் உள்ள வீடுகளுக்கு 24 மணி நேரம் இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை (12 மணி நேரம்) மட்டுமே இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

<u>ஈமச்சடங்கு நிதி உதவி</u>

30. இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு நிதி உதவியை பெரியவர்களுக்கு ரூ.100/–லிருந்து ரூ.500/– ஆகவும் குழந்தைகளுக்கு ரூ.60/–லிருந்து ரூ.300/- ஆகவும் உயர்த்தி வழங்குகிறது.

<u>உள்கட்டமைப்பு மேம்பாடு</u> :

31. 2007–2008ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள எம்.மேட்டுப்பட்டி முகாமில் புதியதாக குடிசைகள் கட்ட ரூ.6 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 2008–09 ஆம் நிதியாண்டில் முகாம்களின் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ.15.98 இலட்சம் அரசினால் அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. மேலும், ரூ.16 கோடி செலவில் பல்வேறு திட்டங்கள் இந்த அரசினால் நடுவண் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அவை தீவிர பரிசீலனையில் உள்ளன.

<u>நிதி பயன்பாடு:</u>

**32. 2007–08** ஆம் ஆண்டில் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கிய வகையில், ரூ.**39.90** கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

**2008–09** ஆம் நிதியாண்டில் இப்பணிகளுக்கென ரூ.**44.34** கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழர் நிவாரண நிதி :**

**33.** இலங்கையில் போரினால் சொல்லொணாத் துயருற்ற இலங்கைத் தமிழ் மக்கள் குடும்பத்திற்கு உதவிகள் புரிந்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ‘‘இலங்கைத் தமிழர் நிவாரண நிதி’’ தோற்றுவித்து, நிதி உதவி வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளுக்கிணங்க **31.3.2009** அன்று வரை ரூ.**50.84** கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்கள்**

**34.** இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக **80** ஆயிரம் சிப்பங்களில் நிவாரணப் பொருட்கள் **13.11.2008** அன்று எம்.வி.கான்டி ஜோர்க் (MV Conti Jork) என்ற கப்பல் மூலமாக சென்னையிலிருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டன. இந்த நிவாரணப் பொருட்கள் இந்திய தூதரகத்திற்கு அனுப்பப்பட்டு, பிறகு அங்கிருந்து பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கம் வழியாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இந்திய-தமிழக மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற நிவாரணப் பொருட்கள் போரினால் பாதிப்பிற்குள்ளான இலங்கைத் தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்திருந்தன என்றும், உரிய நேரத்தில் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைத்த மனிதாபிமானச் செயலானது பெரிதும் பாராட்டுக்குரியது என்றும் இலங்கையிலுள்ள நடுநிலையாளர்களால், கருத்து தெரிவிக்கப்பட்டது. கடந்த **22.4.2009**ஆம் நாள் உணவுப்பொருட்கள், துணிவகைகள் மற்றும் பாத்திரங்கள் அடங்கிய **40** ஆயிரம் சிப்பங்களும்; **9.5.2009**ஆம் நாள் உணவுப்பொருள்கள், துணிவகைகள் மற்றும் காயத்துக்கான முதலுதவிப் பொருட்கள் அடங்கிய **50** ஆயிரம் சிப்பங்களும் கப்பல்கள் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்களாக அனுப்பி வைக்கப்பட்டன

<u>தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு:</u>

**35.** இந்திய குடியுரிமை பெற்ற தமிழ் மரபுவழியினைச் சார்ந்த **1,44,445** நபர்கள் **1963** முதல் **1989** முடிய உள்ள காலத்தில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியுள்ளனர். இதே போல் **1975** முதல் **1980** முடிய உள்ள காலத்தில் **2055** வியட்நாம் வாழ் தமிழரும் தாயகம் திரும்பியுள்ளனர். இலங்கையிலிருந்து **1965** முதல் **4,61,639** இலங்கை வாழ் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர்.

**36.** தாயகம் திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு உதவியாக தேயிலை, ரப்பர், சின்கோனா தோட்டங்களிலும், கூட்டுறவு நூற்பாலைகள், ரெப்கோ வங்கியின் தொழிற் திட்டம் மற்றும் விவசாயம் ஆகிய மறுவாழ்வுத் திட்டங்களிலும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு வணிக மற்றும் வீட்டுக் கடன் வழங்கப்பட்டது. இது தவிர, பால்பண்ணை, சைக்கிள் ரிக்ஷா மற்றும் தீப்பெட்டி தொழில் ஆகிய சுயவேலை வாய்ப்புத் திட்டங்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நடுவண் அரசின் மேற்படி மறுவாழ்வு உதவிகள் அனைத்தும் **31.3.99** அன்று முடிவிற்கு வந்தன.

## V. முன்னாள் படைவீரர் நலம்

**37.** நமது தேசத்தின் காவலர்களாக முப்படைவீரர்கள் என்றென்றும் பெருமைக்குரியவர்களாக பணியாற்றி வருகிறார்கள். உள்நாட்டிலும் எல்லைக்கு அப்பாலும் உருவாகும் இடரார்ந்த சவால்களை எதிர்கொண்டு நமது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டினை நிலைநாட்டும் பொருட்டு இவர்கள் அளவற்ற தியாகங்கள் புரிகின்றனர். போர்முனையில் உயிர்த்தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த படைவீரர்களின் குடும்பத்தார், உடல் ஊனமுற்ற படைவீரர், முன்னாள் படைவீரர்கள் மற்றும் படைவீரர் குடும்பத்தாரின் நலனைப் பேணிக் காப்பது இத்துறையின் முக்கிய பொறுப்புகளாகும். **31.3.2009** அன்றைய நிலவரப்படி பதிவு செய்துள்ள **1,72,407** முன்னாள் படைவீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்களின் விதவையர்களின் மேம்பாட்டிற்காக அனைத்து நலத்திட்டப்பணிகளும் **25** மாவட்ட அலுவலகங்கள் மூலம் செவ்வனே நிறைவேற்றப்படுகின்றன.

<u>துறையின் செயல்பாடுகள்</u>

**1. அரசின் நலத்திட்ட உதவிகள்**

i படைப்பணிக்கு அனுப்பும் பெற்றோர்களுக்கான ஊக்க மானியம்

ii வீரதீரச் செயல்கள்/ சிறப்பாகப் பணிப்புரிந்தமை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு

iii குடிமுறை நிர்வாகத்திற்கு உதவுதல் – மாநில அரசின் கருணைத்தொகை

iv இராணுவ ஆட்சேர்ப்புத் தேர்விற்கான முன்பயிற்சி

v கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

vi கோயில் பாதுகாப்புப் படை

**2. கார்கில் படைவீரர் நிவாரண நிதி**

**3. கொடி நாள் நிதி**

**4. நல நிதியிலிருந்து நிதியுதவிகள்**

i தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

ii தொகுப்பு நிதி

**5. மறு வேலைவாய்ப்பு அளித்தல்**

**6. மறுவாழ்வுப்பயிற்சித் திட்டங்கள்**

**7. சுயவேலைவாய்ப்பு திட்டங்கள், மற்றும்**

**8. போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துதல்**

**1. அரசின் நலத்திட்ட உதவிகள்**

**i. படைப்பணிக்கு அனுப்பும் பெற்றோர்களுக்கான ஊக்க மானியம்**

**38.** தமது ஒரே மகன் / மகள் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மகன்கள் / மகள்களை படைப்பணிக்கு அனுப்பும் பெற்றோர்களை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் அவர்களுக்கு அரசு மானியம் வழங்கி கௌரவிக்கிறது. இந்த வகையில், **2008–2009**ஆம் ஆண்டில் **503** பெற்றோர்களுக்கு ரூ.**5.06** இலட்சம் போர்ப்பணி ஊக்க மானியம் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**ii. வீரதீரச் செயல்கள் / போற்றத்தக்க சேவை ஆகியவற்றிற்காக விருது மற்றும் பதக்கம் பெறுவோருக்கு பணமுடிப்பு**

**39. 2008–2009**ஆம் ஆண்டில், வீரதீரச் செயல்புரிந்த மற்றும் போற்றத்தக்க சேவைக்கான விருதுபெற்ற **34** படைவீரர்களுக்கு ரூ.**1.21** இலட்சம் தமிழக அரசால் ரொக்க உதவித்தொகையாக வழங்க ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களில், **2** படைவீரர்களுக்கு நிலத்திற்குப் பதிலாக ரூ.**1.15** இலட்சம் ரொக்க உதவித்தொகையாக வழங்க தமிழக அரசு, ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**iii. குடிமுறை நிர்வாகத்திற்கு உதவுதல் – மாநில அரசின் கருணைத் தொகை**

**40.** தமிழக அரசு, குடிமுறை நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கைகளின்போது உயிரிழந்த படைவீரர் / எல்லைப் பாதுகாப்புப் படைவீரர்களின் குடும்பத்திற்கு முன்பு வழங்கப்பட்ட ரூ.**1** இலட்சம் கருணைத் தொகையை, **2008–2009** ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.**5.00** இலட்சமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது. அவ்வாறே, ஊனமுற்ற படைவீரருக்கு ஊனத்தின் தன்மைக்கேற்ப ரூ.**10,000/–** முதல் ரூ.**40,000/–** வரை வழங்கப்பட்ட தொகையை, **1.4.2008** முதல் ரூ.**50,000/–**த்திலிருந்து ரூ.**2** இலட்சம் வரை உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளது.

**41. 2008–2009**ஆம் ஆண்டில், உயிரிழந்த **3** படைவீரர்களின் குடும்பத்தினருக்கும், ஊனமுற்ற **6** படைவீரர்களுக்கும்
ரூ.**2.21** இலட்சம் கருணைத் தொகை வழங்க அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**iv. இராணுவ ஆட்சேர்ப்புத் தேர்விற்கான முன்பயிற்சி**

**42.** நமது நாட்டு இளைஞர்களுக்கு, மிகச் சிறந்த வேலைவாய்ப்புகளை இராணுவம் அளிக்கிறது. தமிழ்நாட்டைச் சார்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் அதிக அளவில் சேருவதை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, இராணுவத்தில் சேருவதற்கான எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு ஆயத்தப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படுகிறது. இவ்வகையில் **2008–2009–**ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சார்ந்த **289** இளைஞர்களுக்கு ரூ.**1.67** இலட்சம் செலவில் ஆயத்தப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**v. கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு**

43. தமிழ்நாட்டிலுள்ள பல்வகைப்பட்ட கல்வி நிறுவனங்களில் முன்னாள் இராணுவத்தினரின் சிறார்களுக்கு அரசு இட ஒதுக்கீடு வழங்கி உள்ளது. முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு பொறியியல் கல்வி நிலையங்களில் உள்ள சிறப்பு இடஒதுக்கீட்டினை 81 லிருந்து 150 இடங்களாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு பொறியியல் கல்வி நிலையங்களில் உள்ள Lateral Entry- க்கான சிறப்பு இடஒதுக்கீட்டினை 8–லிருந்து 15 இடங்களாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது அதேபோல், மருத்துவப் பட்டப் படிப்பில் 2 இடங்களும், பல் மருத்துவப் பட்டப் படிப்பில் 1 இடமும், செவிலியர் பயிற்சிப் படிப்பில் 60 இடங்களும், பல்தொழில்நுட்பப் பயிலகங்களில் பட்டயப் படிப்பில் 80 இடங்களும், ஒவ்வொரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பட்டப் படிப்பில் 6 இடங்களும், ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் 132 இடங்களும், சட்டப் படிப்புப் பிரிவில் 1% இடமும் ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது. இதுமட்டுமின்றி, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சிப் படிப்பில் 1 இடமும், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டப் படிப்பில் இரண்டு பாடப் பிரிவுகள் வரையுள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பிரிவிலும் 2 இடங்களும், இரண்டுக்கு மிகையாக பாடப்பிரிவுகள் உள்ள கல்லூரிகளில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 3 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு மருந்தியல், செவிலியர் மற்றும் இயன்முறை மருத்துவப் படிப்பில் தலா 1 இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**vi. கோயில் பாதுகாப்பு படை**

44. தமிழகக் கோயில்களிலுள்ள சிலைகள் மற்றும் விலைமதிப்பற்ற பொருட்களைப் பாதுகாக்கும் வகையில், 1,920 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் படையில் பணியமர்த்தப்பட்டு, அவர்களுக்குத் தொகுப்பூதியமாக மாதம் ரூ.1,500/– வழங்கப்பட்டு வருகிறது.

**2. கார்கில் படைவீரர் நிவாரண நிதி**

**45.** கார்கில் நிவாரண நிதி, அரசின் பொது (இராணுவம்)த் துறையால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. பகைவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் உயிரிழந்த, தமிழ்நாட்டைச் சார்ந்த, படைவீரரின் குடும்பத்தினருக்கும், ஊனமுற்ற படைவீரருக்கும் இந்நிதியிலிருந்து பின்வருமாறு நிவாரண நிதியுதவி வழங்கப்படுகிறது :

| | | | |
|---|---|---|---|
| **1.** | வீர மரணம் அடைந்த வீரரின் குடும்பத்திற்கு | : | ரூபாய் **5** இலட்சம் |
| **2.** | <u>ஊனமடைந்தவர்கள்</u> | | |
| | i) முழுவதுமாக ஊனமடைந்தவர்கள்/ இரு கால்களோ, கைகளோ அல்லது இரு கண்களையும் இழந்தவர்கள். | : | ரூபாய் **3** இலட்சம் |
| | ii) ஒரு கால், கை அல்லது ஒரு கண்ணை இழந்தவர்கள். | : | ரூபாய் **1** இலட்சம் |

**2008–2009**ஆம் நிதியாண்டில், ஜம்மு காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகளின் ஊடுருவலுக்கு எதிரான **“ரக்சக் நடவடிக்கை“**யில் வீரமரணம் எய்திய தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு படைவீரரின் வாரிசுக்கு ரூ.**5** இலட்சம், கார்கில் நிவாரண நிதியிலிருந்து, வழங்கப்பட்டுள்ளது.

## <u>3. கொடிநாள் நிதி</u>

**46.** வீரஞ்செறிந்த முப்படைவீரர்களை கௌரவிக்கும் வகையிலும், அவர்கள்பால் நமக்குள்ள கூட்டொருமையை வெளிப்படுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 7ம் நாள் படைவீரர் கொடிநாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் பொது மக்கள் மனமுவந்து வழங்கும் நன்கொடைகள் திரட்டப்படுகின்றன. அந்த வகையில், கொடி நாள் நிதி வசூலில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிப்பதுடன், இந்திய அளவில், சிறந்த வசூலுக்காக பாதுகாப்பு அமைச்சகம் வழங்கும் கோப்பையை கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு தொடர்ந்து பெற்று வருகிறது. **7.12.2007** முதல் **6.12.2008** வரையிலான கொடிநாள் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ.**7.28** கோடியினையும் மிஞ்சி,

ரூ.**11.06** கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

## <u>4. நல நிதியிலிருந்து நிதியுதவிகள்</u>

### <u>i. தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி</u>

**47.** கொடி நாள் நிதிக்கென வழங்கப்படும் நன்கொடை மற்றும் படைவீரர் மாளிகை மூலம் பெறப்படும் வாடகை வருவாய் ஆகியவை இந்நல நிதியின் ஆதாரமாக அமைகின்றன. தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதி, மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு முப்படை வீரர் வாரியக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. இக்குழுவின் தலைவர், முன்னாள் படைவீரர் நலத் துறையின் அலுவல் வழி இயக்குநராவார். இணை இயக்குநர், இக்குழுவின் செயலாளர் ஆவார்.

**2008–2009** ஆம் ஆண்டு, இந்நிதியிலிருந்து **12,620** முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தோர்களுக்கு, ரூ.**762** இலட்சம் பல்வேறு நலத்திட்ட நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளது.

<u>**ii. தொகுப்பு நிதி**</u>

**48.** மத்திய அரசால் தேசியப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்ட பங்குத் தொகையும், அதற்கு ஈடாக மாநில அரசால் வழங்கப்பட்ட பங்குத் தொகை மற்றும் போருக்குப் பின்னர் சீரமைப்புப் பணிகளுக்கான நிதியின் மீதித் தொகையும் கொண்டு இத்தொகுப்பு நிதி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதி, மேதகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது

**2008–2009**ஆம் ஆண்டு இந்நிதியிலிருந்து **1,328** முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு, ரூ.**60.06** இலட்சம் பல்வேறு நலத்திட்ட நிதியுதவிகளாக வழங்கப்பட்டுள்ளது.

<u>**5. மறு வேலைவாய்ப்பு அளித்தல்**</u>

**49.** தமிழ்நாடு அரசு முன்னாள் படைவீரர்களின் மறு வேலைவாய்ப்பிற்காக பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது.

**50.** மாநில அரசுப் பணிகளில் குரூப் ‘சி’ பிரிவில் **5**%–ம் , அடிப்படைப் பணிகளில் **10**%–ம், வனத்துறையில் காவலர் மற்றும் பாதுகாவலர் பணிக்கு **15**%–ம், மாநில அரசு சார்ந்த நிறுவனங்களில், அடிப்படைப் பணிகளில் **10**%–ம், தேசிய மாணவர் படை அலுவலகங்களில் ஓட்டுநர், காவலர் மற்றும்

சிற்றேவலர் பணியிடங்களுக்கு 25%-ம் முன்னாள் படைவீரர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**51.** மேலும், காவல் துறையில் தொழில் நுட்பப் பிரிவில் இரண்டாம் நிலைக் காவலர் பணிகளில் சேருவதற்கு, உடல் தகுதி மற்றும் மருத்துவப் பரிசோதனைத் தேர்விலிருந்து முன்னாள் படைவீரர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்படும் பணிகளுக்கு முன்னாள் படைவீரர் அல்லது அவர்தம் குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு முன்னுரிமைச் சான்று வழங்கப்படுகிறது. 2008–2009ஆம் ஆண்டில் முன்னாள் படைவீரர்களைச் சார்ந்த 2,144 பேருக்கு வேலைவாய்ப்புப் பெறுவதற்கான முன்னுரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், 202 முன்னாள் படைவீரர்கள் பல்வேறு நிறுவனங்களில் மறுவேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

## 6. மறுவாழ்வுப் பயிற்சிகள்

**52.** முன்னாள் படைவீரர்களின் மறுவேலைவாய்ப்புக்காக, அவர்களுக்கு பல்வேறு தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகிறது. படைப்பணியில் உடற் பயிற்சிக் கல்வித் தகுதி பெற்றவர்கள், அரசுப்பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் நியமனம் பெற்றிடும் வகையில், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் மூலமாக அவர்களுக்கு நான்கு மாத கால சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2008–2009ஆம் ஆண்டு 23 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.1.26 இலட்சம் செலவில் உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 21 முன்னாள் படைவீரர்கள், கால்நடை ஆய்வாளர் பதவிக்கான 11 மாத கால பயிற்சியினைப் பெற்று வருகின்றனர்.

## 7. சுயவேலைவாய்ப்பு திட்டங்கள்

53. முப்படையிலிருந்து ஓய்வு பெற்ற அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் அரசு பணிகள் வழங்க சாத்தியமில்லையென்பதால், தத்தமது இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே முன்னாள் படைவீரர்கள் சுயதொழில் துவக்கிடவும், அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்திடவும் தமிழ்நாடு அரசு நிதியுதவி அளித்து வருகிறது.

54. வங்கியிலிருந்து அதிகபட்சம் ரூ.2.5 இலட்சம் வரை கடன் பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு 50% வட்டி மானியமாக தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 31.3.2009 அன்றைய தேதியில், இத்திட்டத்தின்கீழ் 89 முன்னாள் படைவீரர்கள் / விதவையருக்கு ரூ. 130 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 479 முன்னாள் படைவீரர் / விதவைகளுக்கு ரூ.12.18 இலட்சம் வட்டி மானியம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர் / விதவைகளால் நடத்தப்படும் சுய உதவிக் குழுக்கள் ரூ.7.5 இலட்சம் வரை பெறும் வங்கிக் கடனுக்குத் தொகுப்பு நிதியிலிருந்து 100% வட்டி மானியம் வழங்கப்படுகிறது. தற்போது 21 மாவட்டங்களில் 109 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 3 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.9 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

55. முன்னாள் படைவீரரின் குடும்பத்தைச் சார்ந்த மகளிருக்கு இத்துறையால் நடத்தப்படும் தையல் அலகுகளில் தையல் பயிற்சி அளிக்கப்படுகிறது. 2008–2009 ஆம் நிதியாண்டில் 85 முன்னாள் படைவீரரைச் சார்ந்த மகளிருக்கு தையல் பயிற்சி அளித்து, உதவித் தொகையும் வழங்கப்பட்டது. இலவச தையல் இயந்திரங்கள் மற்றும் மானிய விலையில் தையல் இயந்திரங்கள் வழங்கியது போன்றவற்றிற்கு ரூ.5.95 இலட்சம் செலவிடப்பட்டது.

## 8. போரில் உயிர்நீத்த படைவீரர்களுக்கு இறுதி மரியாதை செலுத்துதல்

56. தாய்நாட்டினைப் பாதுகாத்திட தமது இன்னுயிரை ஈந்த படைவீரர்களின் தியாகங்களைப் போற்றும் வகையில், வீர மரணம் அடைந்த முப்படை வீரர்களின் இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன், நடத்தப்படுகிறது. இதில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சியர் / காவல்

கண்காணிப்பாளர் மற்றும் முன்னாள் படைவீரர் நலத் துறை அலுவலர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

<u>படைவீரர் மாளிகை</u>

**57.** முன்னாள் படைவீரர்களின் நலனுக்கான நிதி ஆதாரத்தை அதிகரிக்க தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி மூலம் வணிக வளாகம் / அலுவலக வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2007–2008ஆம் ஆண்டு, நாகர்கோவிலில், வணிக வளாகம் மற்றும் முன்னாள் படைவீரர் மையம் கட்டுவதற்காக, ரூ.94 இலட்சம், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து செலவிட அரசு அனுமதித்து, அப்பணி முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**58.** தூத்துக்குடி மாவட்டத்தில், ரூ.47.81 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், முன்னாள் படைவீரர் மையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் கோயம்புத்தூர் முன்னாள் படைவீரர் மைய வளாகத்தில் ரூ.197 இலட்சம் செலவில் அடுக்குமாடி கட்டடம் கட்டிட அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி, முதல் தவணைத் தொகையாக, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து ரூ.40.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலர் மற்றும் பணியாளர் நியமனம்</u>

**59.** 2008–2009ஆம் ஆண்டில் முன்னாள் படைவீரர் நலத்துறையில் 4 உதவி இயக்குநர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமும், 4 இளநிலை உதவியாளர், 1 ஓட்டுநர் பணியிடம் மற்றும் 1 காவலர் பணியிடம் ஆகிய பணியிடங்கள் கருணை அடிப்படையிலும், நிரப்பப்பட்டுள்ளன.

## VI. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

**60.** தமிழ்நாடு, முன்னாள் படைவீரர்களின் மறுவாழ்வில் அக்கறையுடனும், முனைப்புடனும் செயல்படுவதில், இந்நாட்டிலேயே, முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. முன்னாள் படைவீரர்களின் ஒட்டுமொத்த பொருளாதார மேம்பாட்டினை கருத்தில்கொண்டு, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), 1956–ஆம் ஆண்டின் நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி, 28.1.1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இது நிதியளவில் தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு

நிறுவனமாகும். இதன் உரிமை பெற்ற மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ. 50 இலட்சம் மற்றும் ரூ.22.91 இலட்சம் ஆகும்.

**தமிழ் நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் முக்கியப் பணிகள்**

**61.** அ) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

ஆ) பாதுகாப்பு பணி, சென்னை மாநகராட்சியின் சார்பாக வாகனங்கள் நிறுத்துவதற்கான கட்டணம் வசூலித்தல், இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு கழகத்தில் தொலைத் தகவல் தொடர்பு பிரிவில் பணியாளர்களை அமர்த்துதல், அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் மற்றும் விமானத்தை பராமரித்தல் ஆகிய பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகளை இக்கழகம் மேற்கொள்கிறது.

இ) பதிவு பெற்ற, தகுதிவாய்ந்த முன்னாள் படைவீரர்கள், இக்கழகத்தால், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்களில், ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பாளர்கள், எழுத்தர்கள், ஓட்டுநர்கள், செவிலியர்கள், தீ அணைக்கும் பணியாளர்கள் மற்றும் தொலை செய்தி இயக்குபவர்கள் ஆகிய பணிகளில் பணியமர்த்தப்படுகின்றனர். இதற்கென 12% சேவைக் கட்டணமாக சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து டெக்ஸ்கோ பெறுகிறது.

ஈ) சென்னை மாநகராட்சியால் அறிவிப்பு செய்யப்பட்ட இடங்களில், வாகனங்களை நிறுத்துவதற்கு, கட்டணம் வசூலிக்கும் பொறுப்பினை இக்கழகத்திற்கு சென்னை மாநகராட்சி ஒப்பந்த அடிப்படையில் அளித்துள்ளது. இப்பணியில் ஈட்டப்படும் நிகர

லாபத்தை சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் முறையே **70 : 30** என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

உ) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம், தமிழ்நாடு அரசின் “**பெல்–412 EP”** ஹெலிகாப்டர் மற்றும் **“செஸ்னா**” விமானத்தை பராமரித்து நிர்வகிக்கும் பணியினை செய்து வருகிறது. இதற்கான பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவினம் இக்கழகத்தால் ஏற்கப்பட்டு, பின்னர் அரசிடமிருந்து திரும்ப பெறப்படுகிறது. பராமரிப்பு செலவில் **2** விழுக்காடு தொகையை அரசு, இக்கழகத்திற்கு சேவை கட்டணமாக வழங்குகிறது.

ஊ) **31.3.2009–**ஆம் தேதிய நிலவரப்படி, தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தால் **8705** முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கடந்த ஐந்தாண்டுகளில், இக்கழகத்தின் செயல்பாடு குறித்த விவரம் பின்வருமாறு:-

| **வருடம்** | **வருவாய்** | **இலாபம்** | **பணியமர்த்தப்பட்ட முன்னாள் படைவீரர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| | **( ரூபாய் இலட்சத்தில் )** | | |
| **2004–2005** | **4403.85** | **411.41** | **7645** |
| **2005–2006** | **4868.61** | **403.82** | **8532** |
| **2006–2007** | **5388.48** | **478.41** | **9136** |
| **2007–2008** | **6325.83** | **490.64** | **9871** |
| **2008–2009** | **6958.41** | **539.70****** | **8705** |

**தோராயமானது மற்றும் தணிக்கைக்குட்பட்டது.

**VII. மாநில மனித உரிமைகள் ஆணையம்**

**62.** மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் **1993**ன்படி ஏற்படுத்தப்பட்ட மாநில மனித உரிமைகள் ஆணையம், **17.4.1997** முதல் கதவு எண். **143**, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை–**28**ல் உள்ள **"திருவரங்கம் மாளிகை"**–யில் இயங்கி வருகின்றது. தற்போது, ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தரத்தில் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டு ஆணையம் செயல்பட்டு வருகின்றது. அரசு, ஆண்டுதோறும் ஆணையத்தின் செலவினங்களுக்கென வரவு செலவு திட்டத்தில் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஆணையம் கீழ்க்கண்ட பிரிவுகளைக் கொண்டு தற்சார்புடன் செயல்படுகிறது:-

(அ) சட்டப் பிரிவு;

(ஆ) புலனாய்வுப் பிரிவு, மற்றும்

(இ) நிர்வாகப் பிரிவு.

**63. 1997**–ஆம் ஆண்டில் மனித உரிமைகள் ஆணையம் தோற்றுவித்தல் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைத்திட்ட ஒரு சில மாநிலங்களில், தமிழகமும் ஒன்று. இந்த அரசு பொறுப்பேற்ற உடன், நீண்ட காலம் நிரப்பப்படாமல் இருந்த இவ்வாணையத்தின் தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்கள் பதவிகளுக்கு, நியமனம் செய்து ஆணை பிறப்பித்தது.

**பணிகள்**

**64.** மனித உரிமைகள் என்பது, அரசியலமைப்பு உறுதிப்படுத்தும் அல்லது இந்திய நீதிமன்றங்கள் அமலாக்கக்கூடிய அனைத்து நாடுகளின் ஒப்பந்தங்களில் உள்ளடங்கிய அடிப்படையான வாழ்வு, விடுதலை, சமத்துவம், மதிப்பு ஆகியவற்றைக் குறிக்கும். மனித உரிமைகள் மீறல் குறித்த புகார்களை எந்த மொழியிலும், கட்டணம் ஏதுமின்றி, எழுதி அனுப்பலாம். புகார்கள், பாதிக்கப்பட்டவராலோ, அல்லது பாதிக்கப்பட்டவருக்காக மற்றவர்களாலோ, எழுத்து வடிவில் தாக்கல் செய்யப்பட வேண்டும். பெறப்படும் மனுக்கள் மீது, ஆணையம் விசாரணை மேற்கொள்கிறது. இருப்பினும், மனித உரிமை மீறல் குறித்து ஆணையம், தன்னிச்சையாகவும் விசாரணை மேற்கொள்ள இயலும்.

**65.** மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை அரசு அலுவலர்களிடையே ஏற்படுத்தும் நோக்குடன், ஆணையம் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகளையும் நடத்துகின்றது. **1997**ஆம்

ஆண்டில் பெறப்பட்ட 2,162 புகார் மனுக்களுடன் ஒப்புநோக்குமிடத்து, 2008ஆம் ஆண்டில் பெறப்பட்ட புகார் மனுக்கள் 12,313ஆக வெகுவாக உயர்ந்திருப்பது பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை நிரூபணம் செய்கிறது.

**66.** ஆணையத்தில், பணிகளைச் சிறப்புடன் நிறைவேற்றத் தேவையான பணியாளர்கள், தொலைபேசி, சீருந்து, மடிக் கணினி போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை தமிழக அரசு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கு, 2009–2010ஆம் நிதியாண்டின் வரவு-செலவு திட்டத்தில் ரூ.1,75,35,000/– மானியத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**67.** தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்திற்கென திருவரங்கம் மாளிகை வளாகத்திற்குள் புதிய கட்டடம் ரூபாய் 3,48,56,000/– செலவில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## VIII. முதலமைச்சரின் தனிப்பிரிவு

**68.** முதலமைச்சரின் தனிப் பிரிவு, பொது மக்களின் குறைகளுக்கு உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக் களைவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு, தனி அலுவலரின் தலைமையில் இயங்குகிறது. பொது மக்களின் குறைகளை உடனடியாக களைவதற்கு ஏதுவாக அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களிடமும் நேரடியாகத் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தக்க நிருவாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**69.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலும், இல்லத்திலும் மற்றும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போதும், பொதுமக்களிடம் பெறும் மனுக்கள், மாவட்ட வாரியாகவும், துறை வாரியாகவும் பிரிக்கப்பட்டு, மனுக்களில் கண்டுள்ள அனைத்து விபரங்களும் கணினியில் தொடர் நடவடிக்கைகாக பதிவு செய்யப்படுகின்றன. உடனடி நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களுக்கு மனுக்கள் அனுப்பப்படுகின்றன. தலைமைச் செயலகத் துறைகள் / துறைத் தலைவர் / மாவட்ட ஆட்சியர்களுடன் தொடர் ஆய்வு கூட்டங்களின் மூலம் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

**நிர்வாக அமைப்பு**

**70.** முதலமைச்சரின் தனிப்பிரிவின் நடைமுறைகளை நெறிமுறைப்படுத்தி நடத்திச் செல்லும் பொருட்டு, இரண்டு அலுவலர்கள்: **(1)** இந்திய ஆட்சிப்பணி அலுவலர் நிலையில் தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப் பிரிவு மற்றும் **(2)** மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர், முதலமைச்சரின் செயலகம், ஆகியோர் நியமிக்கப்பட்டு நாள்தோறும் பெறப்படும் மனுவின்மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றனர். முதலமைச்சரின் தனிப்பிரிவின் தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவின் அனைத்து அலுவல்களையும் கவனித்து வருவதுடன், அனைத்து வேலை நாட்களிலும் பொது மக்களிடமிருந்து மனுக்களை பெறுகிறார். முதலமைச்சரின் செயலக தனி அலுவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இல்லத்தில் வரப்பெறும் கோரிக்கை மனுக்களை கவனிப்பதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சுற்றுப்பயணங்களிலும் கலந்து கொண்டு பொதுமக்களின் மனுக்களைப் பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்கிறார்.

71. முதலமைச்சரின் தனிப்பிரிவில் மின்னஞ்சல், நிகரி, தனியார் அஞ்சல் மற்றும் அஞ்சல் மூலமாக மனுக்கள் பெறப்படுகின்றன. முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் அனைத்து மனுக்களும் மாவட்டம் மற்றும் துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு தொடர்புடைய அலுவலர்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகின்றன. அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்டங்களில் உள்ள தனித் துணை ஆட்சியர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் காவல் துறை ஆணையர்கள் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் முதலமைச்சரின் தனிப்பிரிவின் தனி அலுவலர் அவர்களால் மாதாந்திர ஆய்வு செய்யப்படுகிறது. இதுமட்டுமின்றி தலைமைச் செயலகத் துறைகளின் சார்புச் செயலாளர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer) மற்றும் அலுவலர்களுடன் முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்களுக்கான மாதாந்திர ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வுக் கூட்டங்களின் மூலம், பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய நேரத்தில் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது.

72. இவ்வலுவலகத்தில் 1.4.2008 முதல் 31.3.2009 வரை 2,67,250 மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதே காலகட்டத்தில் நடவடிக்கைகள் எடுத்து பதிலறிக்கைகள் வரப்பெற்ற மொத்தம் 1,67,325 மனுக்கள் முற்றாக்கப்பட்டுள்ளன. மேலும், 1.4.2008 முதல் 31.3.2009 வரை மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து 2,285 மனுக்கள் வரப்பெற்று நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உரிய அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பதிலறிக்கைகள் பெறப்பட்ட 1,586 மனுக்கள் முற்றாக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக அளிக்கப்படும் உதவிகள்**

73. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைகளின் பேரில் முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக வறிய நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து மருத்துவம், கால்நடை மருத்துவம், செவிலியர் மற்றும் பொறியியல் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூபாய் 25,000/– மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையின்பேரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது. இதுமட்டுமின்றி, தகுதியுள்ள வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பொதுமக்களுக்கு உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளும் பொருட்டு ரூபாய் 25,000/–தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பிலிருந்து மருத்துவ உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**1–4–2008 முதல் 31–3–2009 வரை உயிர் காக்கும் அறுவை சிகிச்சைக்காக வழங்கப்பட்ட மருத்துவ நிதியுதவி**

74. 1–4–2008–லிருந்து 31–3–2009 வரை தமிழ்நாடு மாநில நோயாளர் நிதியுதவி அமைப்பிலிருந்து 1839 நபர்களுக்கு 1688 இருதய அறுவை சிகிச்சைகள், 94 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள், 42 புற்றுநோய் அறுவை சிகிச்சைகள், 12 மூளை மற்றும் நரம்பு மண்டல அறுவை சிகிச்சைகள், 1 சிறுநீர் உபாதை/சிறுநீரக கல் நோய்களுக்கான அறுவை சிகிச்சை மற்றும் 2 இடுப்பு மூட்டு மாற்று ( Hip joint replacement ) அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ள ரூ.4,59,55,000/– ஒப்பளிப்பு

செய்யப்பட்டது.

**<u>1–4–2008–லிருந்து 31–3–2009 வரை வழங்கப்பட்ட கல்வி நிதியுதவி</u>**

75. 1–4–2008–லிருந்து 31–3–2009 வரை பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் செவிலியர் கல்வி பயிலும் 157 ஏழை எளிய மாணவ, மாணவியர்களுக்கு (134 பொறியியல் மற்றும் 23 மருத்துவம் மற்றும் செவிலியர் கல்வி மற்றும் கால்நடை மருத்துவம் பயிலும் மாணவ, மாணவியர்கள் ) ரூ.39,25,000/– முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## <u>IX. பகுதி II புதிய திட்டங்கள்</u>

- தலைமைச் செயலாளர் அலுவலக பயன்பாட்டிற்காகவும் பொதுத்துறைக்கும் புதிதாக வண்ண நகலெடுக்கும் மற்றும் அச்சுப்பொறி ஒன்றும், டிஜிட்டல் படிப்பெருக்கி இயந்திரம் ஒன்றும் ரூபாய் 4.71 இலட்சம் செலவில் வாங்குதல்.
- பொதுத் துறையின் (பட்டியல் மற்றும் பணப்பட்டுவாடா பிரிவுகளின்) அலுவலக பயன்பாட்டிற்காக புதிதாக

  ரூபாய் 2.29 இலட்சம் செலவில் 8 கணினிகள் வாங்குதல்.
- பொதுத்துறையில் தபால் விநியோகம் மற்றும் மின்னணு கோப்பு செயல்முறை ஏற்பாட்டு முறைக்கு ரூபாய் 29.52 இலட்சம் செலவில் துணை பாகங்களுடன்கூடிய 56 கணினிகள் மற்றும் அதிக திறன் கொண்ட 10 அச்சுப்பொறிகள் உள்ளிட்ட 26 அச்சுப்பொறிகள் வாங்குதல்.
- தபால் விநியோகம் மற்றும் மின்னணு கோப்பு செயல்முறை ஏற்பாட்டுமுறை தொடர்பாக பொதுத்துறையில் உள்ள கணினிகளை மேம்படுத்துவதற்கும், சில பிரிவுகளுக்கும் முக்கியமான சில பிரிவுகளின் பிரிவு அலுவலர்களுக்கும் மற்றும் அனைத்து சார்புச் செயலாளர்களுக்கும் ரூபாய் 8.65 இலட்சம் செலவில் அந்தந்தப் பகுதிகளுக்கான உள்இணையதள வசதி வழங்குதல்.

- முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்ககத்திற்கு கணினியும் துணை பாகங்களும் ரூபாய் 2.51 இலட்சம் செலவில் வழங்குதல்.
- உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் இல்லத்திற்கு ரூபாய் 0.89 இலட்சம் செலவில் சமையலறை பொருட்கள் வாங்குதல்.
- உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் இல்லத்தில் புதிதாக சீரமைக்கப்பட்ட அறைகளுக்கு ரூபாய் 0.75 இலட்சம் செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குதல்.
- உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் இல்லத்தில் உள்ள தொலைகாட்சிப் பெட்டிகளில் துல்லியமான ஒளிபரப்பு தரத்தைப் பெறுவதற்கு ரூபாய் 0.35 இலட்சம் செலவில் கண்ணாடி இழை கம்பி வடம் மற்றும் தொடர்புடைய துணை பாகங்கள் நிறுவுதல்.
- உதகமண்டலம், தமிழகம் விருந்தினர் இல்லத்திற்காக ரூபாய் 3.05 இலட்சம் செலவில் கம்பளி போர்வைகள், மெத்தைகள், தலையணைகள் மற்றும் குளியல் அறையில் உபயோகப்படுத்தும் துண்டுகள் வாங்குதல்.
- சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்தில் ரூபாய் 15.50 இலட்சம் செலவில் சமையல் கூடத்தினை நவீனப்படுத்துதல் மற்றும் மின் பொருத்திகள் பொருத்துதல்.
- சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு ரூபாய் 1.03 இலட்சம் செலவில் சமையல் பாத்திரங்கள் / மின் உபகரணங்கள் வாங்குதல்.
- சேப்பாக்கம் அரசு விருந்தினர் இல்லத்திற்கு ரூபாய் 1.95 இலட்சம் செலவில் தேவையான படுக்கை விரிப்புகள், திரைசீலைகள், தலையணை உறைகள் மற்றும் மூன்று குளிர்பதன பெட்டிகள் வாங்குதல்.
- சென்னை, சேப்பாக்கம், அரசு விருந்தினர் இல்லத்தில் ரூபாய் 4.50 இலட்சம் செலவில் நவீன தொலைபேசி இணைப்பக கருவி நிறுவுதல்.
- புதுதில்லி கூடுதல் விருந்தினர் இல்லத்தில் ரூபாய் 9.00 இலட்சம் செலவில் நவீன சமையல்கூட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

- புதுதில்லி கூடுதல் விருந்தினர் இல்லத்தில் ரூபாய் 7.00 இலட்சம் செலவில் குடிநீர் சுத்திகரிப்பு கருவி அமைத்தல்.
- புதுதில்லி பழைய தமிழ்நாடு இல்ல உணவருந்தும் கூடத்திற்கு ரூபாய் 5.00 இலட்சம் செலவில் அறைகலன்கள் வாங்குதல்.
- புதுதில்லி கூடுதல் விருந்தினர் இல்லத்தில் ரூபாய் 3.30 இலட்சம் செலவில் கழிவுநீரை மறுசுழற்சி முறையில் பயன்படுத்தும் அமைப்பினை நிறுவுதல்.

## X. நிதி ஒதுக்கீட்டின் விவரங்கள்

76. மானிய கோரிக்கை எண்.38-பொதுத்துறையின் கீழ் 2009-2010-ம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரங்கள் இணைப்பில் உள்ளன.

**மு. கருணாநிதி**
**முதலமைச்சர்**

**இணைப்பு**

**கோரிக்கை எண். 38–ன் கீழ் 2009–2010ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்கள்**

**(பத்தி 76–ஐ பார்க்கவும்)**

| **கணக்குத் தலைப்புகள்** | **(ரூபாய் ஆயிரத்தில்)** | | | |
|---|---|---|---|---|
| | 2007–08 | 2008–2009 | 2008–2009 | 2009–2010 |
| | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| **2014** நீதி நிருவாகம் | 3,30 | 5,00 | 5,00 | 5,00 |
| **2015** தேர்தல்கள் | 40,21,25 | 43,33,67 | 48,19,96 | 113,76,38 |
| **2052** தலைமைச் செயலகம் பொதுவான பணிகள் | 19,42,44 | 22,99,98 | 29,32,50 | 31,20,18 |
| **2059** பொதுப் பணிகள் | 4,56,99 | 3,84,54 | 4,14,72 | 3,42,29 |
| **2070** ஏனைய நிருவாகப் பணிகள் | 15,21,86 | 18,87,82 | 21,50,65 | 20,79,93 |
| **2075** பல்வகைப் பொதுவான பணிகள் | 3,89,12 | 3,16,18 | 3,96,72 | 3,73,02 |
| **2216** வீட்டு வசதி | 14,80 | 17,77 | 17,78 | 17,78 |
| **2235** சமூகப் பாதுகாப்பும் நலனும் | 45,97,84 | 56,02,90 | 59,63,40 | 59,95,35 |
| **2251** தலைமைச் செயலகம் சமூகப் பணிகள் | 58,99 | 57,69 | 80,75 | 87,10 |
| **4216** வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 7,73,57 | 5,00,00 | --- | --- |
| **4235** சமூக பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு | --- | --- | --- | 5,00,00 |